***சகோதரர்களுடன் இணைதல்***

*ஜான் வெஸ்லி அவர்கள் ஜார்ஜியாவில் உள்ள சவான்னா என்ற இடத்திற்குச் சென்ற பொழுது, அங்கு 518 மக்கள் இருந்தனர். அவர்கள் செல்வந்தர்கள், இந்தியர்கள், அடிமைகள் மற்றும் ஏழை மக்கள் என்ற வகைப்பட்டவர்களாய் இருந்தனர். வெஸ்லி பிரசங்கித்த முதல் ஞாயிறன்று அங்குள்ள சிலர் காலணியில்லா திருந்ததைக் கவனித்தார். அடுத்த ஞாயிறு அன்றும் அதன் பிறகு அவர் ஜார்ஜியாவில் இருந்த ஒவ்வொரு ஞாயிறன்றும் அவர் தமது பிரசங்க மேடைக்குச் சென்ற போது வெறுங்கால்களுடனேயே சென்றார்.*

*எல்பர்ட் ஹப்பர்ட்*

*Little Journey's to the Homes of Great Reformers*

***நமக்கு முன்பாக மற்றவர்கள்***

*கர்த்தருடைய ஜெபத்தில் நீங்கள் ஒருமுறை கூட “நான்” என்று கூற முடியாது.*

*கர்த்தருடைய ஜெபத்தில் நீங்கள் ஒருமுறை கூட “என்னுடைய” என்று ஜெபிக்க முடியாது.*

*ஏனெனில் ஒவ்வொரு வேண்டுகோளிலும் மற்றவர்கள் உள்ளடக்கப் பட்டுள்ளனர்.*

*அதன் தொடக்கம் முதல் முடிவு வரையிலும் அது ஓரிடத்திலாவது “எனக்கு” என்று கூறுவதில்லை.*

*அறியப்படாத எழுத்தாளர்*

***இயேசுவின் நகைச் சுவை***

*“இயேசு எப்பொழுதாவது சிரித்தாரா?” என்று யாரோ ஒருவர் கேட்டார்.*

*அதற்கு இன்னொரு நபர், “எனக்குத் தெரியாது, ஆனால் என்னை அவர் நான் சிரிக்கக் கூடிய இடத்தில் வைத்துள்ளார் என்பது நிச்சயம்!” என்று பதில் அளித்தார்.*

## கிறிஸ்துவின் சபையினுடைய நிறுவன அமைப்பு எப்படியிருந்தது?

I. *கிறிஸ்துவின் சபையில் இருந்த பணி நிலைகள் யாவை?*

1. *இயேசுவே சபைக்குத் __________________ இருக்கின்றார். எபே. 5:25*
2. *__________________ ம் மற்றும் __________________ அஸ்திபாரத்தில் இருக்கின்றனர். எபே. 2:20*
3. *அவர் சிலரை __________________, __________________ சிலரைச் __________________, சிலரை __________________, __________________ ஏற்படுத்தினார். எபே. 4:13*

II. *இந்தப் பணி நிலைகளின் நோக்கங்கள் __________________, __________________, __________________ ஆகும். எபே. 4:11, 12*

III. *இந்தப் பணி நிலைகளில் பொறுப்புகள் எவைகளாய் இருந்தன?*

1. *இயேசு __________________ இருக்கின்றார். யாக். 4:12; அப். 3:23, 24*
2. *இயேசுவின் உபதேசத்தைக் __________________ மக்களுக்கு அப்போஸ்தலர்கள் போதிக்க வேண்டியிருந்தது. மத். 28:20*
3. *உபதேசம் __________________ மற்றும் __________________ ஆகியோருக்கு வெளிப்படுத்தப்பட்டது. எபே. 3:6*
4. *சபையானது __________________ உபதேசத்தில் தரித்திருந்தது. அப். 2:42*
5. *மூப்பர்கள் (கிரேக்கம்: poimaino,* pastor, shepherd*) தேவனுடைய மந்தையை __________________ அதைக் __________________ வேண்டியவர்களாய் இருக்கின்றனர். 1 பேது. 5:2, 3*
6. *பவுல் __________________ அழைத்து (அப். 20:17) அவர்கள் __________________ (episkopos,* bishops*) நியமிக்கப்பட்டுள்ள சபையை __________________ வேண்டும் என்று அவர்களுக்குக் கூறினார். அப். 20:28*
7. *சுவிசேஷகர்கள் வசனத்தைப் __________________ வேண்டியவர் களாய் இருந்தனர். 2 தீமோ. 4:2, 5*
8. *போதகர்கள் மற்றவர்களிடத்தில் __________________ வேண்டியவர்களாய் இருந்தனர். 2 தீமோ. 2:2*
9. *சபை __________________ (diakonos, ஊழியம் செய்பவர்கள்)க் கொண்டிருந்தது. 1 தீமோ. 3:8*
10. *சபைகளில் பெண்கள் __________________ வேண்டும். 1 கொரி. 14:34, 35; 1 தீமோ. 2:10-12*
11. *உறுப்பினர்கள் தங்களை ஆளுகின்றவர்களுக்குக் __________________ வேண்டும். எபி. 13:17*

IV. *ஒவ்வொரு சபையிலும் __________________ எத்தனை கண்காணிகள் (மூப்பர்கள், ஆயர்கள், பாஸ்டர்கள்) இருந்தனர்?*

1. ஒவ்வொரு சபையிலும் ____________ நியமிக்கப்பட்டனர். அப். 14:23; தீத்து 1:5
2. இந்த சபைகள் ______________________ க் கொண்டிருந்தன. அப். 15:2; 20:17; பிலி. 1:1

V. இந்தப் பணி நிலைகளில் ஒருவர் பணிபுரிய முடியும் முன்பு அவர் குறிப்பிட்ட சில தகுதிகளை அடைய வேண்டியிருந்ததா?
1. அப்போஸ்தலர்கள் ______________________ அப். 1:21, 22
2. மூப்பர்கள் ______________________ 1 தீமோ. 3:1-7; தீத்து 1:5-9
3. உதவிக்காரர்கள் ______________________ 1 தீமோ. 3:8-13
4. சுவிசேஷகர்கள் ______________________ 2 தீமோ. 2:24, 25
5. போதகர்கள் ______________________ 1 பேது. 4:11

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940



*பாடத் தாளை எடுத்துரைத்தல்:*

# "கிறிஸ்துவின் சபையினுடைய நிறுவன அமைப்பு எப்படியிருந்தது?"

*"கிறிஸ்துவின் சபையினுடைய நிறுவன அமைப்பு எப்படியிருந்தது?" என்ற பாடத் தாளானது "சபை" என்ற பாடத் தாளை(பாடம் 5)த் தொடர்ந்து வருதல் பொருத்தமுடையதாக இருக்கின்றது. படிக்கும் மாணவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியத் தயாராய் இருப்பாரென்றால், "நிறுவன அமைப்பு" பற்றிய இந்தப் பாடத் தாளுக்கு முன்பு "அடைவிடம்" பற்றிய பாடத் தாளை (பாடம் 8) ஒருவர் கற்பிக்க முடிவு செய்யலாம்.*

**நோக்கம்**

*இயேசுவைப் பின்பற்றுபவர்கள் எவ்வித நிறுவன அமைப்புக்குட் பட்டிருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளும்படியாக, சபையானது இயேசுவாலும் அப்போஸ்தலர்களாலும் நிறுவனமாக்கப் படுகையில் அதன் நிறுவன அமைப்பின் நிலை பற்றிக் கற்றுக் கொள்ளுவதே "நிறுவன அமைப்பு" என்ற இந்தப் பாடத் தாளின் நோக்கமாய் உள்ளது.*

**பாடச் சுருக்கம்**

*சபையின் தலைவரான இயேசுவே சபைக்கு ஒரே நியாயப் பிரமாணிகராய்/சட்டம் இயற்றித் தருபவராய் இருக்கின்றார். இயேசுவின் சிறப்புப் பிரதிநிதிகள் என்ற வகையில் அப்போஸ்தலர்கள் இயேசுவின் சட்டங்களை மற்றவர்களுக்கு அவர்கள் இயேசுவின் வசனத்தை அறியும்படி எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. இந்த வசனத்தைப் பின்பற்றி மூப்பர்கள் சபையை வழிநடத்த வேண்டியிருந்தது. உதவிக்காரர்களும் சுவிசேஷ ஊழியர்களும் மூப்பர்களுக்கு உதவ வேண்டியிருந்தது, மற்றும் இயேசுவின் சித்தத்தைச் செயல்படுத்துவதில் சபையானது இந்த முன்னோடிகளைப் பின்பற்ற வேண்டியதாய் இருந்தது.*

---

**அறிமுகம்**

*[செயல் வலிவும் திறமையும் கொண்டிருப்பதற்கு நிறுவன அமைப்பு முக்கியமானதாக உள்ளது என்ற உண்மையைப் பற்றிச் சுருக்கமாய்ப் பேசுவதன் மூலம் இந்தப் பாடத்தை அறிமுகப்படுத்த முடியும். இயேசு*

*தமது சபையின் நிறுவன அமைப்புக்கு ஏற்பாடு செய்தார். இயேசுவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில் நாம் அவருடைய நிறுவன அமைப்பின் திட்டத்தைப் பின்பற்ற நாட வேண்டும்.]*

*இன்றைய நாளில் சபைகள் எனப்படுபவை பல்வேறு வழிமுறைகளில் நிறுவப்படுகின்றன. இந்த சபைகள் ஒரு பலமான மைய அரசைக் கொண்டவைகளாக அந்த மைய அரசே அவைகளின் உள் விவகாரங்களைக் கட்டுப்படுத்தவும் உள்ளூர் சபைகளுக்குக் கட்டளையிடுகின்ற ஆணைகளை எழுதுவதாகவும் உள்ள அமைப்பைக் கொண்டுள்ளன. இது இயேசு தம் சபைக்கு ஏற்படுத்திய திட்டமாயிருந்ததா?*

## I. *பணி நிலைகள்*

*இந்தப் பாடத்தில் நாம், பணி நிலைகள் என்பவற்றைக் கூறும் பொழுது, அதிகாரத்தைப் பற்றியல்ல ஆனால் பொறுப்புக்களைப் பற்றி மட்டுமே கூறுகின்றோம். சில விஷயங்களில் அதிகாரம் என்பது பணி நிலையின் உள்ளானதாக இருக்கின்றது, ஆனால் எல்லா விஷயங்களிலும் இப்படி இருப்பதில்லை; இருப்பினும் எல்லாப் பணி நிலைகளிலும் பொறுப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.*

*1. "சபை" என்ற பாடத் தாளை (பாடம் 5) நாம் படித்த பொழுது, சபையானது இயேசுவின் அதிகாரத்தின் கீழ் இருந்ததாக நாம் கற்றோம். சபைக்கு இயேசு என்னவாக உள்ளார்? [எபே. 5:23ஐ வாசிக்கவும்.] அவர் சபைக்கு என்னவாக உள்ளார்? [கோடிட்ட இடத்தில் "தலையாக" என்று எழுதி நிரப்பவும்.]*

*2. ஒரு கட்டிடம் கட்டப்படுவதற்கு முன்பு, அஸ்திபாரம் போடப் படுகின்றது. அஸ்திபாரமானது கட்டிடத்தின் கீழ் உள்ளது, மற்றும் கட்டிடத்தின் நிலைப்பாடு அஸ்திபாரத்தின் மீது வைக்கப்படுகின்றது. சபையின் அஸ்திபாரத்தில் இருக்கின்றவர்கள் யார்? [எபே. 2:20ஐ வாசிக்கவும்.] இந்த உருவகத்தில் இயேசு அஸ்திபாரத்தின் மூலைக்கல்லாகச் சித்தரிக்கப்படுகின்றார். மூலைக்கல் போடப்பட்ட பிறகு, கட்டிடத்தின் நிலைப்பாடானது மூலைக்கல்லுடன் தொடர்புடைய வகையில் வடிவமைக் கப்படுகின்றது. அஸ்திபாரம் என்பவர்கள் யார்? [கோடிட்ட இடங்களில் "அப்போஸ்தலர்கள்" மற்றும் "தீர்க்கதரிசிகள்" என்று எழுதி நிரப்பவும்.] இவ்வசனப் பகுதியில் பேசப்படுகின்ற தீர்க்கதரிசிகள் என்பவர்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளாய் இராமல் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளாய் உள்ளனர்.*

*இது "சபை" என்ற பாடத் தாளில் (பாடம் 5) நாம் கற்றவற்றுக்கு முரண்படுவதில்லை. அந்தப் பாடத்தில் நாம், இயேசுவே இந்த ஒரே அஸ்தி பாரமாய் இருக்கின்றார் என்று கற்றோம் (1 கொரி. 3:11). அந்த உருவகத்தில் அப்போஸ்தலர்கள் அஸ்திபாரம் இடுகின்றவர்களாகவும், தாங்களே அதன் மீது கட்டியெழுப்புகின்றவர்களாகவும் உள்ளனர். இந்த உருவகத்தில் இயேசு, அஸ்திபாரத்தில் உள்ள பிரதான கல்லாக, மூலைக்கல்லாக இருக்கின்றார். இயேசு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றதில் இருந்து அவருடைய பிரதிநிதிகளாக அவருடைய இடத்தில் அப்போஸ்தலர்கள்*

நின்றிருக்கும் காரணத்தினால் அவர்கள் உட்பட சபையில் உள்ள ஒவ்வொன்றும் இயேசுவுடன் சீர்பொருந்தியுள்ளது. சபையில் இவர்களின் பணிபொறுப்பு பற்றி நாம் பிற்பாடு கலந்துரையாடுவோம்.

*3. எபேசுவில் இருந்த சபைக்குப் பவுல் எழுதிய பொழுது அவர் அட்டவணைப்படுத்துகின்ற பணி நிலைகள் யாவை? [எபே. 4:13ஐ வாசிக்கவும்.] பணி நிலைகள் யாவை?* [கோடிட்ட இடங்களில் "அப்போஸ்தலர்கள்," "தீர்க்கதரிசிகள்," "சுவிசேஷகர்கள்," "மேய்ப்பர்கள்" மற்றும் "போதகர்கள்" என்று எழுதி நிரப்பவும்.] இந்தப் பணிநிலைகள் ஒவ்வொன்றின் பொறுப்புகள் பற்றி நாம் அடுத்த பகுதியில் படிப்போம்.

*இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன?* சபையானது பல்வேறு பணி நிலைகளைக் கொண்டிருந்ததென்றும், அவை யாவும் சபையின் தலையாகிய இயேசுவின் அதிகாரத்தின் கீழேயே பணியாற்றின என்றும் நாம் கற்றறிந்துள்ளோம்.

## II. பணிநிலைகளின் நோக்கங்கள்

இந்தப் பணிநிலைகளில் ஊழியம் செய்பவர்களை மகிமைப் படுத்துவதற்காக இந்தப் பணிநிலைகள் ஏற்படுத்தப்படவில்லை. *இந்தப் பணிநிலைகளில் இருந்தவர்கள் எவற்றை நிறைவேற்ற வேண்டியிருந்தது? [எபே. 4:11, 12ஐ வாசிக்கவும்.] இந்தப் பணிநிலைகள் எதற்காக நிலைநாட்டப்பட்டன?* [கோடிட்ட இடங்களில், "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு," "சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும்," மற்றும் "கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும்" என்று எழுதி நிரப்பவும்.] இவைகள் பணித்துவப் பொறுப்புகள் என்பதைக் கவனியுங்கள். இந்தப் பணிநிலைகளில் இருந்தவர்கள் சபையின் உறுப்பினர்கள் பக்குவமடைவதற்கும், அவர்களின் முன்மாதிரியான இயேசுவின் அளவுக்குத் தக்கதாக அவர்கள் வளர உதவுவதற்கும் ஊழியம் செய்ய வேண்டியவர்களாய் இருந்தனர்.

*இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன?* சபைக்குள் பல்வேறு வகையில் ஊழியம் செய்தவர்கள் சபையைக் கட்டி எழுப்பவும் பக்குவப்படுத்தவும் ஊழியம் செய்ய வேண்டியவர்களாய் இருந்தார்கள் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம்.

## III. பொறுப்புகள்

சபைக்குள் பல்வேறு பணிநிலைகளில் ஊழியம் செய்தவர்கள், சபையின் வளர்ச்சி மற்றும் ஊழியம் ஆகியவற்றில் உதவி நிறைந்த வகையில் செயல்படுவதற்குப் பணிப் பொறுப்புக்களைக் கொண்டிருந்தனர்.

*1.* ஒவ்வொரு நிறுவனமும் வழிகாட்டும் குறிப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். *சபை பின்பற்ற வேண்டிய விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளைத் தீர்மானம் செய்திருப்பவர் யார்? [யாக். 4:12 மற்றும் அப். 3:23, 24ஐ வாசிக்கவும்.] சபையின் தலைவர் என்ற பணிநிலையில் இயேசு, யாராக இருக்கின்றார்?* [கோடிட்ட இடத்தில் "நியாயப் பிரமாணிக்கர்" என்று எழுதி நிரப்பவும்.] சபைக்கு நியாயப்

பிரமாணிக்கர்கள் எத்தனை பேர் உள்ளனர்? சபைக்கு ஒரே ஒரு நியாயப்பிரமாணிக்கர் மட்டுமே இருக்கின்றார். அவர் தம்முடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாத எல்லாரையும் அழித்து விடுவார்.

[பாடத் தாளின் பின்புறத்தில் தாளின் மேற்புறத்தில் ஒரு சிறு செவ்வகம் வரைந்து அதனுள் "இயேசு" என்று எழுதவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)]

2. சட்டங்களையும், விதிகளையும் மற்றும் ஒழுங்கு முறைமைகளையும் ஏற்படுத்துவதற்கென்று சட்டப்பூர்வமான அதிகாரமோ, உரிமையோ அப்போஸ்தலர்கள் கொண்டிருந்ததில்லை. அவர்களின் பொறுப்பு என்னவாக இருந்தது? [மத். 28:20ஐ வாசிக்கவும்.] சபை என்ன செய்யும்படி அவர்கள் போதிக்க வேண்டியிருந்தது? [கோடிட்ட இடத்தில் "கடைப் பிடிக்கும்படி" என்று எழுதி நிரப்பவும்.] மக்கள் மீது விதிகளைக் கட்டுப்பாடு செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லாதிருந்தது. அவர்களுக்கு (மக்களுக்கு)ப் போதிக்கும்படி இயேசு தங்களுக்கு (அப்போஸ்தலர்களுக்கு) அறிவுறுத்தியிருந்தவற்றிற்குக் கீழ்ப்படியுமாறு மக்களுக்குப் போதித்தலே அவர்களின் பொறுப்பாக இருந்தது.

3. இயேசு தாம் பிதாவிடம் ஏறிச் சென்ற பிறகு, தமது போதனையை வெளிப்படுத்துவதற்குப் பலவகையான மக்களைப் பயன்படுத்தினார். அவர் தம் உபதேசத்தை/போதனையை யாருக்கு வெளிப்படுத்தினார்? [எபே. 3:6ஐ வாசிக்கவும்.] அதை அவர் யாருக்கு வெளிப்படுத்தினார்? [கோடிட்ட இடங்களில் "அப்போஸ்தலர்கள்" மற்றும் "தீர்க்கதரிசிகள்" என்று எழுதி நிரப்பவும்.]

4. இயேசு, பரிசுத்த ஆவியானவர் மூலமாக சகல சத்தியத்தையும் அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்கள் பேசிய பொழுது, இயேசுவின் மூலம் தாங்கள் கேள்விப்பட்டிருந்த விஷயங்களைப் பற்றியே அவர்கள் மீண்டும் எடுத்துரைத்தார்கள் (யோவா. 16:13-15). அப்போஸ்தலர்கள் போதித்தவற்றுக்கு நாம் கீழ்ப்படிந்தால், அதனால் நாம் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் ஆகின்றோம். யாருடைய உபதேசத்தில் சபையானது நிலைத்திருந்தது என்று கூறப்படுகின்றது? [அப். 2:42ஐ வாசிக்கவும்.] அவர்கள் யாருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "அப்போஸ்தலர்களின்" என்று எழுதி நிரப்பவும்.] அப்போஸ்தலர்கள் இயேசுவிடமிருந்து தங்கள் உபதேசத்தைப் பெற்றிருந்தார்கள், எனவே அவர்கள் (சபை) அப்போஸ்தலர்களின் உபதேசத்தில் நிலைத்திருந்தனர் என்பதால் இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருந்தனர் என்ற கருத்து தொடருகின்றது.

[பாடத்தாளின் பின்புறத்தில் "இயேசு" என்று எழுதப்பட்டுள்ள செவ்வகத்தின் கீழ் இன்னொரு செவ்வகம் வரைந்து, அதனுள் "அப்போஸ்தலர்கள்" மற்றும் "தீர்க்கதரிசிகள்" என்று எழுதவும். பிறகு இந்த செவ்வகத்தின் கீழ், நான்கு தனித் தனிச் சதுரங்கள் வரையவும்.] சபைகள் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுக்குப் பொறுப்புள்ளவைகளாய் இருந்தன, ஏனெனில் அவர்களின் மூலமாகவே இயேசு தம்முடைய போதனைகளைக் கொடுத்திருந்தார்.

5. பிராந்திய சபைக்குழுமங்களின் முன்னோடிகள் சபைக்குச் சட்டம்

ஏற்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருந்ததில்லை. இயேசுவின் அறிவுறுத்தல்களைச் சபையார் ஏற்று நடத்துவதில் வழி நடத்துவதே இவர்களின் பொறுப்பாக இருந்தது. இவர்கள் மூப்பர்கள் என்று அறியப் பட்டனர், இவர்கள் என்னவாக மற்றும் எதைச் செய்ய வேண்டியவர்களாக இருந்தார்கள்? [1 பேது. 5:1, 2ஐ வாசிக்கவும்.] மந்தைக்கு அவர்கள் என்ன செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "மேய்த்து" என்று எழுதி நிரப்பவும்.] *Poimaino* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து "மேய்த்து" என்ற சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இதனை "பாஸ்டர்" அல்லது "மேய்ப்பர்" என்றும் மொழிபெயர்க்க முடியும். மூப்பர்கள் மந்தையை மேய்க்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். மூப்பர்கள் இன்னும் வேறு என்ன செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "கண்காணிப்பு" என்று எழுதி நிரப்பவும்.]

6. எபேசு சபையின் மூப்பர்களுக்குப் பவுல் அறிவுறுத்தல் கொடுத்தார். அவர்கள் என்னவென்று அழைக்கப்படுகின்றனர்? [அப். 20:17ஐ வாசிக்கவும்.] சபையின் முன்னோடிகளைக் குறிப்பிட்ட பொழுது, பயன்படுத்தப்பட்ட வார்த்தை என்ன? [கோடிட்ட இடத்தில் "மூப்பர்களை" என்று எழுதி நிரப்பவும்.] அவர்கள் என்ன செய்யும்படி கூறப்பட்டது? [அப். 20:28ஐ வாசிக்கவும்.] அவர்கள் எந்த இரு விஷயங்களைச் செய்யும்படி கூறப்பட்டார்கள்? [கோடிட்ட இடங்களில் "கண்காணிகளாக" மற்றும் "மேய்க்க" என்று எழுதி நிரப்பவும்.]

பிராந்திய சபையின் முன்னோடிகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ள மூன்று சொற் பதங்கள் பட்டங்கள் அல்ல ஆனால் முன்னோடி களின் பணிநிலைகளில் அவர்களை விவரிக்கும் சொற்பதங்களாகும். "மூப்பர்கள்" என்ற சொற் பதமானது அவர்கள் புதுக் கிறிஸ்தவர்களில் இருந்தல்ல ஆனால், விசுவாசத்தில் முதிர்ச்சியுற்ற மனிதர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களாய் இருந்தார்கள் என்பதற்கான குறிப்பாகப் பயன்படுத்தப்பட்டது. சமுதாயத்திலுள்ள தலைவர்கள் பொதுவாக "மூப்பர்கள்" என்று அழைக்கப்பட்டனர். "மேய்ப்பதற்கு" என்ற வார்த்தையானது (poimaino என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது) "மேய்ப்பர்" அல்லது "பாஸ்ட்டர்" என்று அர்த்தப்படும் வார்த்தையாக, ஒரு ஆட்டுமந்தையைப் பேணுபவரை அல்லது பாதுகாப்பவரைக் குறிக்கும் வகையில் பயன்படும் வார்த்தையாக உள்ளது. "கண்காணி" மற்றும் "ஆயர்" (bishop) (*episkopos* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது.) என்பது பிராந்திய சபையின் செயல்பாடுகளை நெறிப்படுத்தி இயக்குதல் என்ற அர்த்தப்படுகின்றது. இவைகள் மாறுபட்ட மூன்று பணிநிலைகள் அல்ல, ஆனால் அதற்குப் பதிலாக, ஒரே பணி நிலையை விவரிக்கும் மாறுபட்ட மூன்று சொற்றொடர்களாக உள்ளன. [பாடத் தாளின் பின்புறத்தில் வெற்றுச் சதுரங்கள் நான்கின் (உட்புறத்தின்) மேல் பகுதியில் "மூப்பர்கள்" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)]

இவர்கள் தாங்கள் உறுப்பினர்களாயிருந்த சபைக்கு பாஸ்டர்களாக, கண்காணிகளாக இருந்தார்கள். இவர்கள் மனித ரீதியான தலைமையகம் எதையும் கொண்டிருந்ததில்லை, ஆனால் அதற்குப் பதிலாக கிறிஸ்துவின்

*கீழ் இருந்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரின் கீழ் இருந்தார்கள். இவர்கள் தங்கள் கீழ் ஊழியம் செய்த/ஆராதனை செய்த சபைக்குச் சட்டம் ஏற்படுத்தும் அதிகாரம் கொண்டிருந்ததில்லை. இவர்கள் சட்டம் இயற்றுபவர்களாயில்லாமல், முன்னோடிகளாய் இருந்தார்கள்.*

*இவர்கள்* "*the* preacher" *அல்லது* "*the* pastor" *என்ற சிறப்புத் தகுதி கொண்டிருந்ததில்லை. சபையின் தலைமைத்துவமானது ஆயர்கள் (கண்காணிகள்) மற்றும் பாஸ்டர்கள் (மேய்ப்பர்கள்) என்று அறியப் பட்டிருந்த மூப்பர்களின் கரங்களில் இருந்தது.*

*7. மூப்பர்களின் இயக்கத்தின் கீழ் இருந்த சுவிசேஷகர்களும்* இயேசுவின் போதனையைப் பரப்புவதில் உதவி செய்தனர். இவர்களுக்குப் பவுல் கொடுத்த அறிவுறுத்தல் என்ன? [*2 தீமோ. 4:2, 5*ஐ வாசிக்கவும்.] ஒரு சுவிசேஷகனின் பணி என்னவாக இருந்தது? [கோடிட்ட இடத்தில் ''பிரசங்கிக்க'' என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்பக்கம் வரையப்பட்டுள்ள சதுரங்களில் ''மூப்பர்கள்'' என்பதற்குக் கீழே "சுவிசேஷகர்கள்" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)]

*சுவிசேஷகர்கள் வசனத்தைப் பிரசங்கிக்க வேண்டியவர்களா யிருந்தார்கள். இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரின் மூலமாகக் கொடுத்திருந்த ஒரே வசனத்தை, ஒரே செய்தியை மட்டுமே கிறிஸ்தவர்கள் பிரசங்கிக்கப் பெற்றிருந்தார்கள். அவர்கள் சபைக்கு விதிகளையும் சட்டங்களையும் ஏற்படுத்த உரிமை பெற்றிருந்த தில்லை. இயேசுவிடம் தொடங்கியிருந்த செய்தியே அவர்கள் எடுத்துரைக்க வேண்டிய செய்தியாக இருந்தது.*

*8. மூப்பர்களின் வழிகாட்டுதலின் கீழ்,* போதகர்களும் ஊழியம் செய்தனர். அவர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது? [*2 தீமோ. 2:2*ஐ வாசிக்கவும்.] போதகர்களின் பொறுப்பு என்னவாக இருந்தது? [கோடிட்ட இடத்தில் "போதிக்க" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் சதுரங்களினுள் "உதவிக்காரர்கள்" என்பவற்றிற்குக் கீழ், "போதகர்கள்" என்று எழுதவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)] அவர்கள் அப்போஸ்தலர் களிடமிருந்து, இவ்விடத்தில் அப்போஸ்தலரான பவுலிடமிருந்து கற்றுக் கொண்டிருந்த யாவற்றையும் போதிக்க வேண்டியவர்களாய் இருந்தனர். பவுல் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இயேசுவிடமிருந்து தம் செய்தியைப் பெற்றிருந்தார் (எபே. 3:3-5). போதகர்கள் மற்றவர்களுக்கு விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டியிருந்ததில்லை, அதற்குப் பதிலாக அவர்கள், இயேசு அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் கொடுத்திருந்த செய்தியை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டியவர்களா யிருந்தார்கள்.

*9. முன்னோடித்துவப் பொறுப்புக்களைக் கொண்டிராத மற்றவர் களும் சபையில் இருந்தனர். அவர்கள் யார்? [1 தீமோ. 3:8*ஐ வாசிக்கவும்.] *அவர்கள் என்னவென்று அழைக்கப்பட்டனர்?* [கோடிட்ட இடத்தில் "உதவிக்காரர்களை" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் சதுரங்களினுள் ''உதவிக்காரர்கள்'' என்று எழுதவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)] *Diakonos* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து டீக்கன் என்ற

வார்த்தை ஒலி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இவ்வார்த்தையானது பணிபுரிய அல்லது தொண்டு செய்ய என்று அர்த்தப்படுகின்றது. இவர்களுக்கு மேற்பார்வையிடும் நிலை கொடுக்கப்படவில்லை, ஆனால் அதற்குப் பதில் சபைக்குத் தேவைப்படும் ஊழியங்களைக் கையாளுவதில் தங்களிடம் கேட்கப்பட்டவைகளை நன்கு செய்வதற்கு மூப்பர்களால் நம்பக் கூடிய அளவுக்குப் பொறுப்புள்ள மனிதர்களாய் இருந்தார்கள்.

10. சபைகளில் பெண்கள் மிக முக்கியமானவர்களாய் இருந்தார்கள். அவர்கள் சபையில் மாபெரும் ஊழியர்கள் சிலருடன் இணைந்து பணியாற்றினார்கள் (பிலி. 4:3). பெண்களின் மீது ஒரு சில தடைகள் மட்டுமே விதிக்கப்பட்டிருந்தன. பெண்களின் பணிப் பொறுப்பு பற்றிப் பவுல் எழுதியது என்ன? [1 கொரி. 14:34, 35; 1 தீமோ. 2:10-12ஐ வாசிக்கவும்.] பெண்கள் மீது இருந்த தடைகள் என்ன? [கோடிட்ட இடத்தில் "பேசாமலிருக்க" என்று எழுதி நிரப்பவும்.]

ஒவ்வொரு கிறிஸ்தவருக்குமே (சில) தடைகள் உள்ளன, எல்லாரும் ஒரே மாதிரியான திறனில் பணிபுரிவதில்லை (1 கொரி. 12:28, 29). ஒரு சில மனிதர்கள் மட்டுமே நியமிக்கப்பட்ட முன்னோடிகளாக ஊழியம் செய்ய முடிந்தது, மற்றும் எல்லாரும் ஊழியக்காரர்களாகவோ, அல்லது உதவிக் காரர்களாகவோ அல்லது போதகர்களாகவோ இருந்ததில்லை. ஆண்களைப் போலவே ஒவ்வொரு பணிநிலையிலும் பெண்களும் ஊழியம் செய்ய முடியும், ஆனாலும் அதில் இரண்டு தடைகள் மட்டும் உள்ளன: அவர்கள், சபையில் முன்னோடித்துவப் பொறுப்புக்களை மேற்கொள்ளலாகாது அல்லது பிராந்திய சபைக் குழுமங்களில் மூப்பர்களாக நியமிக்கப் படலாகாது. இல்லங்களில் பிள்ளைகளுடன் பெண்கள் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பின் காரணமாக அவர்கள் பிள்ளைகளின் மூலமாக சபையில் ஆண்கள் கொண்டுள்ள அதே செல்வாக்கைக் கொண்டிருக்க முடியும். பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதன் மூலம் (1 தீமோ. 2:15) அவள் மகிமையடைய முடியும் மற்றும் பெண் என்ற வகையில் அவள் தனது பணிப் பொறுப்பில் ஆண்களுக்குக் கிடைக்காத வகையில் சிறப்பான ஊழியம் செய்ய முடியும்.

11. அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாகக் கையளிக்கப் பட்ட அறிவுறுத்தல்களை அறிந்தவர்களால் சபை உறுப்பினர்கள் வழி நடத்தப்பட வேண்டியிருந்தனர். சபையின் முன்னோடிகளுக்கு இவர்கள் எவ்வகையில் பதில்செயல் செய்பவர்களாய் இருந்தார்கள்? [எபி. 13:17ஐ வாசிக்கவும்.] இவர்கள் தங்களுக்கு மேலாயிருந்தவர்களுக்கு எவ்விதம் பதில்செயல் செய்கிறவர்களாயிருக்க வேண்டியிருந்தனர்? [கோடிட்ட இடத்தில் "கீழ்ப்படிந்து அடங்க" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் சதுரங்களில், "உறுப்பினர்கள்" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)] வாழ்விலும் இயேசுவால் போதிக்கப்பட்ட போதனையிலும் உறுப்பினர்களை வழி நடத்துவது முன்னோடிகளின் பணியாய் இருந்தது. சபைக்கு ஆவிக்குரிய வழிகாட்டும் குறிப்புகளைத் தர நாடுகையில் முன்னோடிகளுக்கு சபை உடனடியாக இணங்குவது அவசியமாயிருந்தது.

இந்தப்பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? சபையானது

*முறைப்படி நிறுவப்பட்டிருக்கையில் இயேசுவே சபையில் யாவருக்கும் தலையாய் இருக்கிறார் என்பதை நாம் கற்றுக் கொண்டுள்ளோம். சபையானது பின்பற்றத் தேவையான எல்லா அறிவுறுத்தல்களையும் இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் ஆகியோர் மூலமாகக் கொடுத்தார். இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோருக்குச் சபையில் நிரந்தரமான பணிநிலைகள் உள்ளன, அவர்களைப் பின்தொடருபவர்கள் (பதவி நிலையில்) யாருமில்லை அதாவது அவர்களுக்குப் பதிலாக எவரொருவரும் அப்பதவி நிலையில் இருக்க முடியாது. சபையில் எப்பொழுதும் உள்ள அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் யாரெனில், இயேசு பரலோகம் சென்ற உடனேயே புதிய உடன்படிக்கையைப் பெற்றுக் குறுகிய காலமே ஊழியம் செய்தவர்களே ஆவார்கள். ஒரே முறையாக ஒப்புவிக்கப்பட்ட (யூதா. 3) இயேசுவின் சித்தம் பற்றி அறிவதற்கு, சபையானது இவர்களையே பின்னோக்கிப் பார்க்க வேண்டியதாயுள்ளது. இயேசு, சபைக்கு நியமித்த ஊழியத்தை அவரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிறுவன நடையில் செய்யும்படி நாடுபவர்களாக இருப்பவர்களே கிறிஸ்துவின் சபையார் என்ற குழுவினர் ஆவர்.*

## IV. *முன்னோடிகளின் எண்ணிக்கை*

*1. முன்னதாக இப்பாடத்தில் நாம், முன்னோடிகள் என்பவர்கள் (அந்தந்த) பிராந்திய சபைகளிலும் இருக்கின்ற மூப்பர்களாவர் என்று கற்றோம். ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் ஒரு மூப்பரை(பாஸ்டர், ஆயர்)க் கொண்டிருந்ததா அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களைக் கொண்டிருந்ததா? [அப். 14:23; தீத்து 1:5 ஆகியவற்றை வாசிக்கவும்.] ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் ஒரே ஒரு மூப்பர் தேர்ந்தெடுக்கப் பட்டாரா? அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனரா? [கோடிட்ட இடத்தில் "மூப்பர்கள்" என்று எழுதி நிரப்பவும்.] மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்ற உண்மையானது பிராந்திய சபைகள் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களைக் கொண்டிருந்தன என்ற கருத்தை மறைமுகமாய் உணர்த்துகின்றது.*

*2. சபைகள் நிறுவப்பட்ட பிறகு அவைகளைப் பற்றி நடபடிகளின் புத்தகம் குறிப்பிடுகின்றது. பிராந்திய சபைகள் ஒரே ஒரு மூப்பரைக் கொண்டிருந்தன என்று விவரிக்கப்படுகின்றனவா? [அப். 15:2; 20:17; பிலி. 1:1 ஆகியவற்றை வாசிக்கவும்.] பிராந்திய சபை மூப்பரைக் கொண்டிருந்தனவா அல்லது மூப்பர்களைக் கொண்டிருந்தனவா? [கோடிட்ட இடத்தில் "மூப்பர்களை" என்று எழுதி நிரப்பவும்.]*

*இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? கர்த்தருடைய பிராந்திய சபைகள் ஒரு மனிதரின் ஆளுகையை நடைமுறைப் படுத்தவில்லை என்று நாம் கற்றுள்ளோம். சபையின் நடவடிக்கைகளைத் தனியொரு மனிதராக எவரும் கண்காணிக்கவில்லை. ஒவ்வொரு பிராந்திய சபையும் நியமிக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முன்னோடிகளைக் கொண்டிருந்தன, இது* "the elder" *(ஒரு மூப்பர்) எந்த*

*ஒரு பிராந்திய சபையிலும் இருந்ததாக ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லை ஆனால் குறிப்பானது எப்பொழுதுமே பிராந்திய சபையின் "மூப்பர்கள்" என்றே உள்ளது என்ற உண்மையிலிருந்து தெளிவாகிறது.*

## V. தகுதிகள்

*சபையின் பல்வேறு பணி நிலைகளில் எவராகிலும் பணியாற்ற முடிந்திருந்ததா? அல்லது தகுதிகள் தேவைப்பட்டனவா?* [*1 முதல் 5 வரை உள்ள எண்களின் பக்கம் உள்ள பின்வரும் வேத வசனக் குறிப்புகளை வாசிக்கவும்: அப். 1:21, 22; 1 தீமோ. 3:1-7; தீத்து 1:5-9; 1 தீமோ. 3:8-13; 2 தீமோ. 2:24, 25; 1 பேது. 4:11.*] ஒவ்வொரு முறையும் வேத வசனங்களைப் *பரிசீலிக்கவும்.* இந்தப் பல்வேறு பணி நிலைகளில் ஒருவர் ஊழியம் செய்ய முடியு முன்பாக தடைகள் மற்றும் தகுதிகள் ஆகியவை கனப்படுத்தப்பட வேண்டியிருந்தனவா? [கோடிட்ட இடங்கள் *ஒவ்வொன்றிலும்* "ஆம்" என்று எழுதி நிரப்பவும்.] [ஒவ்வொரு பணிநிலைக்கான தகுதிகளை விவரமாக கலந்துரையாட வேண்டும் என்பது இப்பகுதியின் நோக்கமல்ல. அதை இன்னொரு வேளையில் செய்து கொள்வோம். இந்தப் பொறுப்புகளுக்கு கிறிஸ்தவராயுள்ள யாராவது ஒருவர் நியமிக்கப்பட்டு விட முடியாது என்பதைக் காண்பதற்குக் கற்பவருக்கு உதவுவதே நோக்கமாய் உள்ளது.]

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளவை என்ன? பிராந்திய சபைக் குழுமங்களில் பல்வேறு பணிநிலைகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் அப்பொறுப்புகளை ஏற்பதற்கு முன்பாக தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர் என்று நாம் கற்றுள்ளோம்.

## தொகுப்புரை

*சபையின் முழு அதிகாரமும் இயேசுவிடமே உள்ளது என்ற உண்மையானது இந்தப்பாடத்தில் தனித்து நிலைநிற்க வேண்டிய கருத்தாக உள்ளது. அவரே சபைக்குத் தலையாக உள்ளார், சபை செயல்படக் கூடிய வகை முறையைப் பற்றி அவரே ஏற்பாடுகள் செய்து அறிவுறுத்தி யிருக்கின்றார்.*

I. *கிறிஸ்துவின் சபையில் இருந்த பணிநிலைகள் யாவை?* இயேசுவே தலையாக உள்ளார். அவருக்குக் கீழாக, அப்போஸ்தலர்களும், தீர்க்க தரிசிகளும், சுவிசேஷகர்களும், மேய்ப்பர்களும் மற்றும் போதகர்களும் உள்ளனர்.

II. *இந்தப் பணி நிலைகளின் நோக்கம் என்னவாயிருந்தது?* சபையானது இயேசுவுக்கு அதிகமான ஊழியத்தை நிறைவேற்றும்படி அதைக் கட்டி எழுப்பி பக்குவப்படுத்துவதே நோக்கமாயிருந்தது.

III. *இந்தப் பணி நிலைகளின் பொறுப்புகள் என்னவாயிருந்தன?* இயேசு ஒருவரே சட்டம் கொடுப்பவராய் இருக்கின்றார். சபை பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்களை அவர் அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலம் கொடுத்துள்ளார். இந்தத் தகுதி நிலையில் அவர்களையே ஒவ்வொரு பிராந்திய சபையும் பின் நோக்க வேண்டும்.

சுவிசேஷகர்கள், போதகர்கள், உதவிக்காரர்கள், பெண்கள் மற்றும் உறுப்பினர்களைக் கொண்ட பிராந்திய சபைகள் மூப்பர்களால் வழிநடத்தப்பட வேண்டியவைகளாக உள்ளன. பிராந்திய சபைக் குழுமத்தின் ஊழியம் மற்றும் உறுப்பினர்களின் ஆவிக்குரிய நலம் ஆகியவற்றை செயல்பாட்டில் ஒருங்கிணைக்க மூப்பர்கள் உதவுகின்றனர் (எபி. 13:17).

ஒவ்வொரு உறுப்பினரும் தாம் உறுப்பினராயுள்ள சபையில் தனக்குரிய பணிப் பொறுப்பைக் கொண்டுள்ளார். எல்லாரும் ஒரே பணிப் பொறுப்பில் செயல்படுவதில்லை.

IV. *ஒவ்வொரு சபையிலும் எத்தனை கண்காணிகள் (மூப்பர்கள், கண்காணிகள், ஆயர்கள்) இருந்தனர்?* ஒவ்வொரு பிராந்திய சபையும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களால் வழி நடத்தப்பட்டது. ஒவ்வொரு பிராந்திய சபையும் தனது சொந்த மூப்பர்களை, தனது சொந்தக் கண்காணிகளை, அதாவது ஆயர்கள் மற்றும் மேய்ப்பர்களைக் கொண்டிருந்தது, அவைகள் மனிதராலான ஒரு மையத் தலைமையகத்தினால் கட்டுப்படுத்தப்படவோ அல்லது வழிநடத்தப்படவோ கிடையாது.

V. *இந்தப் பணி நிலைகளில் ஒருவர் பணி செய்யு முன்பு குறிப்பிட்ட தகுதிகளை உடையவராக இருக்க வேண்டியிருந்ததா?* பிராந்திய சபைகளில் பணியாற்றத் தொடங்குமுன்பு பொறுப்புகள் ஒப்புவிக்கப்பட்டவர்கள் தகுதியுடையோராய் இருக்க வேண்டியிருந்தனர்.

சபையின் மீதான அதிகாரம் இயேசுவுக்கு மட்டுமே உரியது என்று வேத வசனங்கள் தெளிவாய்ப் போதிக்கின்றன. வேறு எவருக்கும் இந்த உரிமையில்லை. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் ''கடைப்பிடிக்க'' (மத். 28:20) வேண்டியவர்களாய் இருந்தனர், அவர்கள் மனிதர்களின் போதனைகளையும் கட்டளைகளையும் கடைப் பிடிக்க வேண்டியதில்லை.

அடுத்த பாடத்தில் நாம், ஆராதனையில் பயன்படுத்தும்படி இயேசு விரும்புகின்றவை என்ன என்பது பற்றிப் படிப்போம்.

[கற்பவருடன் இன்னொரு பாட வேளைக்கு ஏற்பாடு செய்யவும்.]